DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C. No. 12/2023

Prosecution side witness for P.W.10

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. இசக்கிமுத்து | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **30.01.2026**

A1 is absent, U/s. 317 Cr.P.C. petition filed and allowed. A2 produced.

முதல்விசாரணை:–

நான் பிறந்தது முதல் தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் தாலுகா ஆனந்தபுரம் தெற்கு தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் சாத்தான்குளத்தில் உள்ள பாரத் பெட்ரோல் பல்க்கில் வேலை செய்து வருகிறேன். சாட்சி தனுஷ் என்பவரை எனக்கு தெரியும். அவரும் அதே பல்க்கில் சேல்ஸ் மேனாக வேலை செய்து வந்தார். இந்த வழக்கு சம்மந்தமாக 22.08.2022 ஆம் தேதி இரவு நானும், சாட்சி தனுஷ்–ம் டுட்டியில் இருந்தோம். வந்த ஆள் தெரியாது, கேள்விப்பட்டதுதான். தாவீது என்பவரும், கண்ணன் என்பவரை கரையடி கோவில் அருகே கொலை செய்துவிட்டதாக கேள்விப்பட்டோம். அவர்கள் பல்க்கிற்கு அன்று வந்தார்களா என்றால் வரவில்லை. இறந்துபோன கண்ணனுக்கு மது அருந்தும் பழக்கம் உண்டு. அவர் எங்கள் பல்க்கில் வந்துதான் தண்ணீர் எடுத்துக்கொண்டு போய் பக்கத்தில் இருந்து மது அருந்துவார். இறந்த அன்றையதினம் பல்க்கிற்கு வந்தாரா என்றால் வரவில்லை.தாவீது மற்றும் டேனி செல்வனை தெரியாது. அங்கே பஸ்ஸ்டாண்டில் பேன்சி கடை வைத்திருப்பவர்தான் என் பிரண்டை எரித்துகொன்றுவிட்டதாக என்னிடம் வந்து சொன்னார். வேறு எந்த விவரமும் தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் ரோந்து வரும்போது 22.08.2022 அன்று விசாரித்தார்கள். அவர்களிடம் பெட்ரோல் போட வந்தவர்கள் எரித்து கொன்றுவிட்டதாக பேசிக்கொண்டதாக அவர்களிடம் சொன்னேன். வேறு எந்த விவரமும்தெரியாது.

**(இந்நிலையில் சாட்சி வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள விபரங்களில் சிலவற்றிற்கு மாறுபாடாக சாட்சியமளித்ததால், அரசு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி சாட்சி பகுதியாக பிறழ் சாட்சியாக கருதபட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன்பேரில் அனுமதிக்கப்பட்டது.)**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலீசார் விசாரித்தார்கள் என்றும், போலீசார் விசாரணையின்போது, கடந்த 22.08.2022 ஆம் தேதி நானும், தனுஷ்–ம் எங்கள் பல்க்கில் வேலை செய்துகொண்டிருந்தபோது அன்றையதினம் 11.30 மணியளவில் செல்வராஜ் மகன் தாவீது என்பவர் TN69 D 3783 என்ற Hero Splender மோட்டார் சைக்கிளின் நடுவில் தங்கதுரை மகன் 2ம் எதிரி டேனிசெல்வத்தையும், அவனுக்கு பின்னால் சாத்தான்குளம் முருகன் மகன் கண்ணனையும் ஏற்றிக்கொண்டு இடது பக்கமாக திரும்பி எங்கள் பெட்ரோல் பல்க் எதிரே உள்ள சாத்தான்குளம் கரையடி சுடலைமாடசுவாமி கோவில் ரோட்டை பார்த்து ஓட்டிக்கொண்டு சென்றார் என்றும், அவர் அடிக்கடி 3 பேரும் சேர்ந்து பிராந்தி குடித்துகொண்டு சுற்றி திரிவார்கள் என்றும், பிறகு 23.08.2022 ஆம் தேதி அதிகாலை 1.30 மணியளவில் தாவீது ஓட்டிக்கொண்டுபோன அதே பைக்கில் டேனிசெல்வனை மட்டும் பின்னால் ஏற்றிக்கொண்டு கரையடி சுடலைமாடசுவாமி கோவில் ரோட்டிற்கு வந்து வலது பக்கமாக திரும்பி இட்டமொழி ரோட்டை நோக்கி வண்டியை வேகமாக ஓட்டி கொண்டு போனார் என்றும், ஆனால் பின்னால் இருந்த கண்ணனை காணவில்லை என்றும், பிறகு விடிந்தபிறகு மதியத்திற்கு மேல் மேற்படி கண்ணன் சாத்தான்குளம் கரையடி சுடலைமாடன் கோவில் அருகேயுள்ள சுடுகா அருகே தலையில் பலத்த காயங்களும், உடலில் தீ எரிந்த காயமும் ஏற்பட்டு இறந்து கிடப்பதாக கேள்விப்பட்டேன் என்றும், நான் போய் பார்த்தேன் என்றும், பின்னர் சுடலைமுத்து என்பவரை விசாரிக்க மேற்படி எதிரிகள்தான் கண்ணனை பைக்கில் அழைத்துக்கொண்டுசென்று தீ வைத்து எரித்துள்ளார்கள் என்றும், இருவரும் சேர்ந்து கான்கிரிட் கல்லை கண்ணனின் தலையில் போட்டு கொலை செய்த விவரத்தையும், எரிக்கப்பட்டதையும் சொன்னார் என்றும், இது சம்மந்தமாக அவரது அண்ணன் நடவடிக்கை எடுக்க சாத்தான்குளம்காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும் ஆய்வாளர் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>குறுக்குவிசாரணை (1ம் எதிரிதரப்பில்)</u>

22.08.2022 அன்று போலீசார் விசாரணை செய்தபிறகு அதன்பின்பு இந்த வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். நான் வேலை பார்க்கும் பெட்ரோல் பல்க்கில் சிசிடிவி கேமரா உண்டு என்றால் சரிதான். நான் வேலைக்கு வந்தால் மேனேஜரிடம் தகவல் சொல்வோம் என்றால் சரிதான். கண்ணன் மது அருந்திவிட்டால் அவருக்கு என்ன நடக்கிறது என்று அவருக்கு தெரியாது என்றும், மதுபோதையில் அவரது அண்ணன் வீட்டின் கண்ணாடி ஜன்னல்களை உடைத்து பிரச்சனை செய்வார் என்பதையும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் பார்த்த வகையில் கண்ணன் குடித்துவிட்டு அடிக்கடி அவரது அண்ணனிடம் பிரச்சனை செய்வார். கண்ணன் இறந்துவிட்டார் என்பதை கேள்விப்பட்டதாக சொல்வது இந்த வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட சங்கதி என்றுசொன்னால் சரியல்ல.

<u>குறுக்குவிசாரணை (2 ம் எதிரிதரப்பில்)</u>

கண்ணன் அதிகமாக மது அருந்திவிட்டு மனநலம் பாதிக்கப்பட்டவர் போல் அழைவார் என்றால் சரியல்ல. ஆனால் அதிகமாக மது அருந்துவார். அவர் அதிகமாக மது அருந்தி சண்டைபோட்டதாக சாத்தான்குளம் காவல்நிலையத்தில் வழக்கு இருக்கின்ற விவரம் தெரியுமா என்றால் அவரது அண்ணனிடம் சண்டை போடுவார். கரையடி சுடலைமாடசுவாமி கோவிலுக்கு யார் போனாலும் பெட்ரோல் பல்க்கில் உள்ள சிசிடிவி கேமராவில் தெரியும் என்றால் தெரியும், ஆனால் சரியாக தெரியவில்லை. கரையடி சுடலைமாடசுவாமி கோவிலிலும் சிசிடிவி கேமரா உள்ளது என்றால் நான் கோவிலுக்கு சென்றதில்லை. இறந்துபோன கண்ணன் கரையடி சுடலைமாடசுவாமி கோவிலுக்கு போக தெற்கு கீழ ரதவீதிக்கோ, பஜாருக்கோ வரவேண்டிய அவசிமியல்லை என்றால் சரிதான்.

<u>மறுவிசாரணை இல்லை.</u>

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C. No. 12/2023

Prosecution side witness for P.W.11

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. பாலமுருகன் | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **30.01.2026**

A1 is absent, U/s. 317 Cr.P.C. petition filed and allowed. A2 produced.

<u>முதல்விசாரணை:-</u>

நான் கடந்த 35 வருடங்களாக திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தாலுகா, இட்டமொழி தெற்குதெருவில் குடியிருந்து வருகிறேன். நான் தச்சு வேலை செய்து வருகிறேன். சாட்சி சுந்தர் என்பவரை எனக்கு நன்கு தெரியும். 24.08.2022 அன்று நானும், சுந்தரும் பகல் சுமார் 3.15 மணியளவில் சாத்தான்குளம் புதுக்குளம் போகவேண்டி புதுக்குளம் விலக்கு அருகே வந்து கொண்டிருந்தோம். அப்போது சாத்தான்குளம் போலீசார் வாகன சோதனை செய்து கொண்டிருந்தார்கள். அங்கே எதிரிகள் தாவீது, டேனிசெல்வத்தையும் பிடித்தார்கள். அவர்களை என் முன்பும், சுந்தர் முன்பும் விசாரித்தார்கள். அவர்கள் விசாரணையில் கண்ணன் என்பவரை கொலை செய்த விவரத்தை சொன்னார்கள். அவர்கள் சொல்ல சொல்ல ஆய்வாளர் மடிக்கணினியில் தட்டச்சு செய்தார். அதில் கண்ணன் என்பவரை கூட்டிக்கொண்டு சென்று கொலை செய்ய பயன்படுத்திய ஸ்பிளண்டர் பிளஸ் மோட்டார் சைக்கிளை அடையாளம் காட்டி ஆஜர்செய்தார். அதன் பதிவெண் TN69 D 3783 ஆகும். அதை ஆய்வாளர் கைப்பற்றி எழுதிக்கொண்டு எங்களிடம் கையெழுத்து வாங்கினார். அதில் நான் முதலாவதாகவும், 2 வதாக சுந்தரும் கையெழுத்து செய்து கொடுத்தோம். அதற்கான அத்தாட்சி நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ-5** ஆகும். எதிரி தாவீது கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ-6** ஆகும். அதில் நான் முதலாவதாகவும்,

2வதாக சுந்தரும் கையெழுத்து செய்து கொடுத்தோம். எதிரி டேனிசெல்வன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ–7** ஆகும். அதில் நான் முதலாவதாகவும், 2வதாக சுந்தரும் கையெழுத்து செய்து கொடுத்தோம். அதில் எதிரி டேனிசெல்வன் கரையடி சுடலைமாடசுவாமி கோவிலை அடையாளம் காட்டினார். அந்த வண்டியை நீதிமன்றத்தில் காண்பித்தால் அடையாளம் காட்ட இயலும். நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் TN69 D 3783 என்ற பதிவெண் கொண்ட கிரே கலர் ஸ்பிளண்டர் பிளஸ் மோட்டார் சைக்கிள் ஒன்று **(சொத்துப்பட்டியல் வரிசை எண். 8ல் உள்ளது) அது அ.சா.பொ.4** ஆகும். இது சம்மந்தமாக என்னையும் சுந்தரையும் போலீசார் விசாரித்தார்கள்.

<u>குறுக்குவிசாரணை (1ம் எதிரிதரப்பில்)</u>

இறந்துபோன கண்ணன் எனக்கு தாய்மாமா என்றால் சரிதான். நான் புதுக்குளம் விலக்கிற்கு எப்படி வந்தேன் என்றால் இருசக்கரவாகனத்தில் வந்தேன். யாருடைய வண்டியில் என்ன பைக்கில் வந்தேன் என்றால் என்னுடைய பல்சர் பைக்கில் வந்தேன். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் விசாரிக்கும்போது என்னுடைய பல்சர் பைக்கில்தான் வந்தேன் என்று சொன்னேனா என்றால் சொன்னேன். எதிரிகள் எந்த திசையிலிருந்து எந்த திசையை நோக்கி வந்தார்கள் என்றால் ஏற்கனவே கைது செய்து விசாரணை செய்து வைத்திருந்தார்கள். நாங்கள் வருவதற்கு முன்பு எதிரிகளிடம் ஆய்வாளர் மற்றும் போலீசார் என்ன பேசி வைத்திருந்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஒப்புதல்வாக்குமூலத்தை யார் தட்டச்சு செய்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. எங்கு போய் பிரிண்ட் எடுத்தார்கள் என்றால் சாத்தான்குளம் சென்று பிரிண்ட் எடுத்து வந்தார்கள். சாத்தான்குளத்தில் காவல்நிலையத்திற்கு சென்று பிரிண்ட் எடுத்தார்களா அல்லது கடையில் எடுத்தார்களா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரிகள் 2பேரையும் ஆய்வாளர் கைது செய்து வைத்திருக்கும்போது என்ன நிறத்தில் என்ன விதமான ஆடை அணிந்திருந்தார்கள் என்றால் என்னால் சொல்லஇயலாது. அத்தாட்சியை அங்கு வைத்துதான் தட்டச்சு செய்தார்கள். யார் தட்டச்சு செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. அனைத்து கையெழுத்துக்களும் ஒரே இடத்தில் வைத்துதான் போட்டுக்கொடுத்தேன் என்றால் சரிதான். நான்முதல்விசாரணையில் சொல்லியுள்ளதுபோல் எதிரிகள் எங்கள் முன்னிலையில் எந்தவிதமான ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும், அதன் அடிப்படையில் வழக்கின் சொத்துக்கள் கைப்பற்றப்படவில்லை என்றாலும்

சரியல்ல. இறந்துபோனவர் எனது மாமா என்பதால் போலீசார் கேட்டுக்கொண்டபடி காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டுக்கொடுத்தேன் என்றால் ஒரு கையெழுத்து காவல்நிலையத்தில் வைத்து போட்டுக்கொடுத்தேன். அந்த ஒரு கையெழுத்து எதில் போட்டுக்கொடுத்தேன் என்றால் ஒப்புதல்வாக்குமூலத்தில் போட்டுக்கொடுத்தேன். முதல்விசாரணை சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் போலீசார் சொல்லிக்கொடுத்தப்படி சொல்கிறேன் என்றாலும், வழக்கின் சொத்துக்கள் எங்கள் முன்னிலையில் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல.

<u>குறுக்குவிசாரணை (2ம் எதிரிதரப்பில்)</u>

இறந்துபோன கண்ணன் எனக்கு தாய்மாமா என்றால் சரிதான். நான் புதுக்குளம் விலக்கிற்கு எப்படி வந்தேன் என்றால் இருசக்கரவாகனத்தில் வந்தேன். யாருடைய வண்டியில் என்ன பைக்கில் வந்தேன் என்றால் என்னுடைய பல்சர் பைக்கில் வந்தேன். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் விசாரிக்கும்போது என்னுடைய பல்சர் பைக்கில்தான் வந்தேன் என்று சொன்னேனா என்றால் சொன்னேன். எதிரிகள் எந்த திசையிலிருந்து எந்த திசையை நோக்கி வந்தார்கள் என்றால் ஏற்கனவே கைது செய்து விசாரணை செய்து வைத்திருந்தார்கள். நாங்கள் வருவதற்கு முன்பு எதிரிகளிடம் ஆய்வாளர் மற்றும் போலீசார் என்ன பேசி வைத்திருந்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஒப்புதல்வாக்குமூலத்தை யார் தட்டச்சு செய்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. எங்கு போய் பிரிண்ட் எடுத்தார்கள் என்றால் சாத்தான்குளம் சென்று பிரிண்ட் எடுத்து வந்தார்கள். சாத்தான்குளத்தில் காவல்நிலையத்திற்கு சென்று பிரிண்ட் எடுத்தார்களா அல்லது கடையில் எடுத்தார்களா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரிகள் 2 பேரையும் ஆய்வாளர் கைது செய்து வைத்திருக்கும்போது என்ன நிறத்தில் என்ன விதமான ஆடை அணிந்திருந்தார்கள் என்றால் என்னால் சொல்லஇயலாது. அத்தாட்சியை அங்கு வைத்துதான் தட்டச்சு செய்தார்கள். யார் தட்டச்சு செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. அனைத்து கையெழுத்துக்களும் ஒரே இடத்தில் வைத்துதான் போட்டுக்கொடுத்தேன் என்றால் சரிதான். நான்முதல்விசாரணையில் சொல்லியுள்ளதுபோல் எதிரிகள் எங்கள் முன்னிலையில் எந்தவிதமான ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும், அதன் அடிப்படையில் வழக்கின் சொத்துக்கள் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. இறந்துபோனவர் எனது மாமா என்பதால் போலீசார்

கேட்டுக்கொண்டபடி காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டுக்கொடுத்தேன் என்றால் ஒரு கையெழுத்து காவல்நிலையத்தில் வைத்து போட்டுக்கொடுத்தேன். அந்த ஒரு கையெழுத்து எதில் போட்டுக்கொடுத்தேன் என்றால் ஒப்புதல்வாக்குமூலத்தில் போட்டுக்கொடுத்தேன். முதல்விசாரணை சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் போலீசார் சொல்லிக்கொடுத்தப்படி சொல்கிறேன் என்றாலும், வழக்கின் சொத்துக்கள் எங்கள் முன்னிலையில் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை.</u>

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.